பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 12 2024 **SUNDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியா – குவைத் இடையே பாதுகாப்பு, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த வகை செய்யும் நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

- திரிபுரா மாநிலத்தில் வன்முறைகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டு, தற்போது அமைதி நிலவி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- விமான நிலையங்களில் குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- தமிழகத்தின் வளர்ச்சிக்கான மத்திய அரசின் திட்டங்களுக்கு திமுக அரசு தடையாக உள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

- இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இன்டீஸ் வெற்றிபெற 315 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<**

குவைத்தில் இரண்டு நாள் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி சற்றுமுன் புதுதில்லி புறப்பட்டார்.

முன்னதாக, திரு. நரேந்திர மோடி, குவைத் அரசர், Sheikh Meshal Al Ahmed Al Jaber Al Sabah-வுடன் பேச்சு நடத்தினார்.

அரசுமுறைப் பயணமாக குவைத் சென்றுள்ள பிரதமர் நடத்திய இந்த பேச்சுக்களின் போது, தகவல் தொழில்நுட்பம், நிதிசார் தொழில்நுட்பம், கட்டமைப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதுகாப்பு துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென பரஸ்பரம் இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதாக மேலும் அவர் கூறுகிறார்.

குவைத்தில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரின் நலனை உறுதி செய்வதற்காக பிரதமர் இந்த பேச்சுக்களின் போது நன்றி தெரிவித்துக் கொண்டதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

இந்த பேச்சுக்களுக்குப் பின்னர், அந்நாட்டு இளவரசர்-உடனும், பிரதமருடனும் பேச்சு நடத்திய திரு. நரேந்திர மோடி, இந்தியா வருமாறு அந்நாட்டு பிரதமருக்கு அழைப்பு விடுத்தார்.

குவைத் நாட்டு தலைவர்களுடன் நடத்திய இந்த பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், வரும் காலங்களில் இரு நாடுகளுக்கு இடையேயான உறவு மேலும் வலுவடைய இந்த பேச்சுவார்த்தை உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

குவைத் நாட்டின் உயரிய விருது தமக்கு வழங்கப்பட்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுக்களுக்குப் பின்னர், இருநாடுகளுக்கு இடையே நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பாதுகாப்பு, கலாச்சாரம், விளையாட்டு, சூரிய மின்சக்தி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தங்கள் வகை செய்கின்றன.

>>>>><<<<

திரிபுரா மாநிலத்தில் வன்முறைகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டு, தற்போது அமைதி நிலவி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

திரிபுராவின் Dhalai-ல் 668 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்ததோடு, புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அவர் பேசினார்.

திரிபுராவில் அமைதி திரும்புவதற்காக பிரிவினை வாத குழுக்களுடன் மூன்று ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, அந்த குழுக்கள் வன்முறையை கைவிட்டு, ஜனநாயக பாதைக்கு திரும்பியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இம்மாநிலத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

Bru Reang சமுதாயத்தினரின் நீண்டகால கோரிக்கைகளை பிஜேபி தலைமையிலான அரசு நிறைவேற்றியிருப்பதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>><<<<

மத்திய மின் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் திருவனந்தபுரத்தில் இன்று அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

மத்திய இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி, மாநில அமைச்சர் திரு. கிருஷ்ணன் குட்டி மற்றும் உயரதிகாரிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

மின்துறை, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதி துறையின் திட்டங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மத்திய அரசின் முக்கிய திட்டங்களின் செயலாக்கம் குறித்தும், இதில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<

நுகர்வோர் நலனுக்காக மூன்று கைபேசி செயலிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தேசிய நுகர்வோர் தினமான நாளை மறுநாள், இந்த கைபேசி செயலிகள் செயல்பாட்டிற்கு வரும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில், புகார்களை எளிதாக பதிவு செய்வதற்கும், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை அறிந்து கொள்வதற்கும் இந்த கைபேசி செயலி உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<

விமான நிலையங்களில் குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

முதற்கட்டமாக, கொல்கத்தாவில் தொடங்கப்பட்ட உணவகம் பெரிய அளவில் வெற்றிபெற்றதை அடுத்து, அனைத்து விமான நிலையங்களிலும் இதனை அறிமுகப்படுத்த விமான நிலையங்களுக்கான ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த உணவகங்களில் தேநீர், காபி, குடிநீர் மற்றும் தின்பண்டங்கள் குறைந்த விலையில் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

தமிழகத்தின் வளர்ச்சிக்கான மத்திய அரசின் திட்டங்களுக்கு திமுக அரசு தடையாக உள்ளதாக பிஜேபி மகளிர் அணி தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை பட்டியலிட்டார்.

திமுக செயற்குழுக் கூட்டத்தில் மத்திய அரசுக்கு எதிராக தவறான குற்றச்சாட்டுகளுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் அவர் குறை கூறினார்.

விஸ்வகர்மா திட்டத்தை மற்றொரு பெயரில் செயல்படுத்தும் திமுக அரசு, நவோதயா பள்ளிகளை தொடங்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் குறை கூறினார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் திருமதி. வானதி சீனிவாசன் குற்றம் சாட்டினார்.

>>>>><<<<

ஊரக வளர்ச்சியின் முதுகெலும்பாக வேளாண் துறை திகழ்வதாக குடியரசுத் துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சௌத்ரி சரண்சிங் விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

வேளாண், ஊரக மேம்பாடு மற்றும் இதழியல் துறையில் சாதனை படைத்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஊரக வளர்ச்சிக்காகவும், விவசாயிகள் மேம்பாட்டிற்காக சௌத்ரி சரண்சிங் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

>>>>><<<<

ஒடிசாவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர் சேதம் குறித்த விவரங்களை மாவட்ட ஆட்சியர்கள் முறையாக மதிப்பீடு செய்ய வேண்டும் என்று அம்மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

புவனேஷ்வரில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. Suresh Pujari, மழை பாதிப்பு குறைந்த பின்னர் இந்த கணக்கெடுப்பு பணி நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

பயிர் சேதத்திற்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

விவசாயிகள் நலனில் பிஜேபி தலைமையிலான அரசு அக்கறையுடன் இருப்பதாகவும் திரு. Suresh Pujari தெரிவித்தார்.

>>>>><<<<

பஞ்சாப் மாநிலம், மொஹாலியில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விபத்துக்குள்ளானதில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படையின் நான்கு குழுக்கள், 24 மணிநேரத்திற்கும் மேலாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இன்று காலை ஒருவர் மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>>>>><<<<

தில்லியில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஆம் ஆத்மி, மக்களுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்ளவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. Samrat Choudhary, தில்லி மக்கள் இதனை உணர்ந்திருப்பதாக தெரிவித்தார்.

மக்கள் தினசரி எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து, முன்னாள் முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் மௌனம் சாதிப்பது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

பிஜேபியை பொறுத்தவரை மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்பட்டு வருவதாகவும் திரு. Samrat Choudhary தெரிவித்தார்.

>>>>><<<<

இலங்கை முன்னாள் அதிபர் திரு. ரணில் விக்கிரமசிங்கே நான்கு நாள் பயணமாக நீலகிரி சென்றுள்ளார்.

இலங்கையிலிருந்து விமானம் மூலம் கோவை சென்ற அவர் அங்கிருந்து சாலை மார்க்கமாக உதகை சென்றடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து, திரு. ரணில் விக்கிரமசிங்கே தங்கியிருக்கும் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<

இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 315 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் வெஸ்ட் இன்டீஸ் சற்றுமுன்வரை 2 புள்ளி ஒரு ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 81 ரன் எடுத்துள்ளது.

வதோதராவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற வெஸ்ட் இன்டீஸ் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து, பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 314 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Smriti Mandhana 91 ரன் எடுத்தார்.

>>>>><<<<

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Lamabam Nilam Devi மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் மகளிர் 55 கிலோ எடைப்பிரிவில் அவர், இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

>>>>><<<<

மும்பையில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat Singh பட்டம் வென்றார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-8, 11-8, 11-8 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Akanksha Salunkhe–யை வென்றார்.

>>>>><<<<

மும்பையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Riya Bhatia – Zeel Desai இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>END<<<<